# TCDSB இனது
# பொது உடைத் தொகுதியின் அறிமுகம்

## பெற்றோர்/பாதுகாவலருக்கான வினா விடைகளடங்கிய விபரக்கொத்து

1. **நிர்வாக சபையால் கத்தோலிக்க கனிஷ்ட (ஆரம்பப்) பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட இருக்கும் பொது உடைத் தொகுதியின் அமைப்பு யாது?**

அடிப்படையில், TCDSB ஆனது 2011 செப்டெம்பர் காலப்பகுதிக்குள் சகல கத்தோலிக்க கனிஷ்ட (ஆரம்பப்) பாடசாலைகளிலும் அமுல்படுத்தப்படக் கூடிய வகையில், பொது உடைத் தொகுதி ஒன்றினை அறிமுகப்படுத்த உள்ளது. இப் பொது உடைத் தொகுதியானது தற்போது அமுலில் உள்ள Pupil's Policy A.S 07 எனப்படும் உடைக்கொள்கையின் மறுசீரமைக்கப்பட்ட ஒரு கொள்கையாக் கொள்ளப்படுகின்றது. இது பாடசாலை ரீதியில் பொருத்தமான ஒரு உடைத் தொகுதியாகக் கருதப்படுகின்றது. இது அச்சுக்கள் இல்லாத வெள்ளை நிற மேலாடையையும், கருநீல நிறக் ( NAVY BLUE) கீழாடையையும், அன்றேல் கரு நீல நிற மேலாடையையும் கீழாடையையும் உள்ளடக்கியதாக இருக்கும்.

**டெனிம் (DENIM) துணியிலான உடைகள் அனுமதிக்கப்படமாட்டாது.**

2. **இப்பொது உடைத் தொகுதியின் அறிமுகத்தினால் ஏற்படக் கூடிய நன்மைகள் என்ன?**

- பாடசாலைகளின் பாதுகாப்பு ஊக்குவிக்கப்படும்.
- சமூக ரீதியான ஆடை சம்பந்தமான முரண்பாடுகள் தவிர்க்கப்பட்டு, ஒரு பொதுத்தன்மை உருவாகும்.
- மாணவர்கள் தமது உடையலங்காரங்களில் கவனத்தைச் செலுத்தாது, கல்வி விடயங்களில் கவனத்தைச் செலுத்த உதவும்.
- கத்தோலிக்கப் பாடசாலைகளுக்கான அடையாளத்தை உறுதிப்படுத்தும்.
- பொருளாதார ரீதியில் பெற்றோருக்குக் கொள்வனவுச் சுதந்திரம் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.
- பெற்றோர் மாணவர்களுக்கான காலை நேர வேலைச் சிக்கல் பெருமளவில் தவிர்க்கப்படும்.
- கணிஷ்ட சிரேஷ்ட பாடசாலைகளுக்கிடையில் ஆடை ரீதியான ஒருமைப்பாடு காணப்படும்.
- மாணவர்கள், கனிஷ்ட பாடசாலையிலிருந்து சிரேஷ்ட பாடசாலைக்கு மாறும் கால கட்டத்தில் சீருடைப் பாணியில் உடையணிதலுக்குப் பழக்கப்பட்டிருப்பர்.

3. **TCDSB ஆனது ஒரு பொது உடைத் தொகுதி முறையினை அறிமுகப்படுத்துவதற்குக் தூண்டு கோளாக அமைந்த காரணிகள் எவை?**

பல்வேறுபட்ட தகவல் மையங்களில் இருந்து பெறப்பட்ட விபரங்களின் அடிப்படையில், இப் பொது உடைத் தொகுதி அறிமுகம் செய்யப்படவிருக்கிறது. மேலும், TCDSB யால் 2008 ஜனவரி மாதத்திலிருந்து 2009 பெப்பிரவரி மாதம் வரையிலான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஒரு பூரணமான ஆய்வு மூலம், பல்வேறு விடயங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

சகல கத்தோலிக்கக் கனிஷ்ட பாடசாலைகளிலும் நடாத்தப்பட்ட ஆய்வுகளில், பாடசாலைச் சமூக உறுப்பினர்கள் பொருத்தமான ஒரு உடைத் தொகுதி பற்றி வினவப்பட்டனர். மேலும், சீருடை முறை மூலம் பாடசாலைகளில் எற்படக்கூடிய மாற்றங்கள், மற்றும் விளைவுகள் பற்றி ஆராயப்பட்டது.

அடுத்து, டொரன்ரோ மாநகரப் பகுதியில் உள்ள ஏனைய பாடசாலை நிர்வாக சபைகளில் பின்பற்றப்படும் சீருடை முறைகளும், பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அத்துடன், பொருளாதாரக் காரணிகளும் கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டன.

இந்தப் பொது உடைத் தொகுதி அறிமுகத்தின் மூலம், ஆரம்பத்தில் பல நடைமுறைச் சிக்கல்களை எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலை எற்படக்கூடிய வாய்ப்புக்கள் இருப்பினும், எமது சபையின் கீழ் பதிவசெய்யப்பட்டுள்ள ஏறக்குறைய 61279 மாணவர்களுக்கும் அவர்களின் பெற்றோருக்கும் மிகச் சிறந்த நன்மையையே ஈட்டித் தரும் என்பது எமது நம்பிக்கை.

4. **அடிப்படையில், TCDSB ஆனது, சீருடை முறையைத் தவிர்த்து பொது உடைத் தொகுதி முறையை அறிமுகப்படுத்துவதற்குச் சார்பாக அமைந்த காரணிகள் எவை?**

சீருடை முறையைத் தவிர்த்து, பொது உடைத் தொகுதி முறையை அறிமுகம் செய்வதன் மூலம், மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் பரந்த அளவிலான தெரிவுச் சுதந்திரம் வழங்கப்படுகின்றது. அத்துடன், பெரும்பாலான விற்பனையாளார்களிடம் இவ்வகையான உடைகளைக் கொள்வனவு செய்யக் கூடியதாகவும் இருக்கும். மேலும், பொருளாதார ரீதியிலும், பொது உடைத் தொகுதியின் அறிமுகம், பெரும் தாக்கத்தை உருவாக்க மாட்டாது எனக் கருதப்படுகின்றது.

**5. நிர்வாக சபையானது எதனடிப்படையில் பொது உடைத் தொகுதியின் நிறங்களைத் தீர்மானித்தது?**

வெள்ளை நிறமும், கரு நீல நிறமும், முரணற்ற நிறங்களாகவும் பொது உடைத் தொகுதிக்கு ஏற்ற நிறங்களாகவும் கருதப்படுகின்றது. மேலும், தற்போது சீருடை முறை அமுலில் உள்ள பாடசாலைகளில், நடாத்தப்பட்ட ஆய்வுகளில், இந் நிறங்களிலான உடைகள் பெருமளவில் பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்புக்களும், சூழ்நிலையும் நிலவுவதாக அறியப்படுகின்றது.

**6. மாணவர்கள் எவ்வகையான ஆடைகளை அணியக் கூடியதாக இருக்கும்?**

- அரைக்காட்சட்டைகள் (shorts)
- முழுக்காட்சட்டைகள் (pants)
- பாவாடைகள் (skirts)
- ஸ்கோட் (skorts)
- சட்டைகள் (dresses)
- ரீ சேட் (t' shirt)
- கார்கோ / கெப்ரீ (cargo / capri)
- பிளவுஸ் (blouse)
- Golf shirt
- Dress shirt

**7. கனிஷ்ட (ஆரம்பப்) பாடசாலைகளில் இப் பொது உடைத் தொகுதி முறை, எந்தக் காலகட்டத்தில் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட இருக்கிறது?**

இப் பொது உடைத் தொகுதியானது, 2011 செப்டெம்பர் மாதத்திற்குள் அமுல்படுத்தப்பட வேண்டும் என, அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனினும், இந்நடைமுறையானது நிர்வாக சபையின் வெவ்வேறு பாடசாலைகளில், வெவ்வேறு கட்டங்களாக அமுல்படுத்தப்படவுள்ளன. இதனடிப்படையில், செப்டெம்பர் 2011 வரையில், போதுமான கால அவகாசம் சகல பாடசாலைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இதனை ஆரம்பிப்பதற்கு 2009-2010 வரையான காலம் போதுமானதாக அமைந்துள்ளது.

இக்காலப் பகுதிக்குள் சகல கனிஷ்ட பாடசாலைகளும், இப் பொது உடைத் தொகுதி முறை தொடர்பான சகல விபரங்களையும் பெற்று, ஒன்று கூடி முழுமையான தீர்மானம் ஒன்றினை எடுக்கும் வாய்ப்புக்கள் ஏற்படும். ஒவ்வொரு பாடசாலைக்கும், அதன் சமூகத்திற்கும், தனித்துவத்தை ஏற்படுத்திக் கொடுப்பதே இந்நடைமுறையின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாகும். இதனடிப்படையில், செப்டெம்பர் 2009ல் சில பாடசாலைகளில் இப் பொது உடைத் தொகுதி முறையானது நடைமுறைக்கு வருகின்றது.

**8. கத்தோலிக்க நிர்வாக சபையில் அடங்கும் எனது பாடசாலையில், சீருடை முறை அல்லது பொது உடைத் தொகுதி முறை ஏற்கனவே அமுலில் இருப்பின், இப் புதிய பொது உடைத் தொகுதி முறையின் அறிமுகம் எவ்வகையான தாக்கத்தை ஏற்படுத்தும்?**

ஏற்கனவே, பொது உடைத் தொகுதி முறை அல்லது சீருடை முறை அமுலில் உள்ள 49 பாடசாலைகளில், இதனை அமுல்படுத்தத் தேவையில்லை என்பது, இங்கு குறிப்பிடப் பட வேண்டும்.
இவ்வாறான, பாடசாலைகளிலிருந்து அங்கத்தவர்களை அழைத்து, தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ள முடியும். 49 பாடசாலைகளின் பெயர் விபரங்கள், 2009 பெப்பிரவரி மாதம் 25ம் திகதி வெளியிடப்பட்டுள்ள, TCDSB மேற்பார்வைக் குழுவினுடைய அறிக்கையின் பின்னிணைப்பில் வெளியிடப்பட்டுள்ளது.

**9. தற்போது TCDSB மூலம் அமுல்படுத்தப்பட்டுள்ள உடைத் தொகுதிக் கொள்கை யாது?**

தற்போது TCDSB இனது உடைத் தொகுதிக் கொள்கையானது Pupils Policy S S 07 ஆகக் காணப்படுகின்றது. இது சீருடை முறை, பொருத்தமான உடைத் தொகுதி முறை, பொது உடைத் தொகுதி முறை என மூன்று உடைத் தொகுதி முறைகளைக் கொண்டிருக்கின்றது. சீருடை முறையானது, குறிப்பான ஒரு விற்பனையாளார்களிடமிருந்து பெறப்படும் குறிப்பான ஆடை வகைகளைக் குறிக்கும். பொருத்தமான உடைத் தொகுதி முறையானது, குறிப்பிட்ட ஒரு நிறத் தொகுதியைக் கொண்டிருக்கின்றது. பொது உடைத் தொகுதி முறையானது, பாடசாலை ரீதியில் ஏற்றுக்கொள்ளக் கூடிய முறையான ஆடை வகைகளைக் (Halter Tops அல்லாத) குறிக்கும்.

**10. எவ்வகையான மேலதிக ஆடை வடிவங்களைத் தெரிவு செய்வதில், பாடசாலை ஆலோசனைக் குழுக்கள் தமது சுதந்திரத்தினைப் பயன்படுத்த முடியும்?**

- ✓ உடை விபரம் (கழுத்தப்பட்டை – Collar உள்ள கழுத்தப்பட்டை அல்லாத மேலாடைகள்)
- ✓ மேலாடைக்கு மேலாக அணியும் ஆடை விபரங்கள் (Vests)
- ✓ பாடசாலை இலட்சணை (School Crest)
- ✓ விளையாட்டு உடைகள் (Gym Attire)
- ✓ ஏனையவை (Accessories)
- ✓ தரப்பட்ட இரு நிறங்களில் சீருடை முறையை அமுல் படுத்துவது குறிப்பிட்ட பாடசாலையையும், பாடசாலை சமூகத்தினையும் பொருத்து அமையும்.

**11. இப் பொது உடைத் தொகுதி முறை தொடர்பான, எவ்வகையான வாய்ப்புக்களும், ஆலோசனைகளும், விசேட தேவையுள்ள மாணவர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்தினருக்கும் வழங்கப்படவுள்ளன?**

இவ்வாறான விசேட தேவையுள்ள மாணவர்களின், சகல விசேட தேவைகளும் அவர்களுடைய பாடசாலைகளினால் கவனத்தில் கொள்ளப்பட்டு, பொது உடைத் தொகுதியானது தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவை, தனிப்பட்ட முறையில் குறிப்பிட்ட மாணவர்களின் தேவைகளுக்கிணங்க, மாற்றி அமைக்கப்படும். மேலும், ஆடைகள் தயாரிக்கப்படும் துணி வகைகளும், அவர்களுடைய தேவைகளுக்கிணங்க தெரிவு செய்யப்படும்.

**12. இப் பொது உடைத் தொகுதி முறையின் அறிமுகத்தால், பொருளாதார ரீதியில் பாதிக்கப்படும் குடும்பங்களுக்கு, எவ்வகையான வசதி வாய்ப்புக்கள் வழங்கப்படவுள்ளன?**

TCDSB பாடசாலைகள் அனைத்தும், தத்தமது பாடசாலைகளைச் சார்ந்த குடும்பங்களின் பொருளாதார நிலைகளை நன்கு கவனத்திற் கொண்டே செயற்படுகின்றது. அடிப்படையில், இப் பொது உடைத் தொகுதி அறிமுகம் செய்வதன் மூலம், பல குடும்பங்களின் சாதாரண ஆடைகளின் கொள்முதல் செலவினத்தைக் குறைத்து, சகல விற்பனையாளார்களிடமிருந்தும், இவ்வாறான வெள்ளை, மற்றும் கரு நீல நிறங்களிலான ஆடைகளைக், குறைந்த செலவில் கொள்வனவு செய்யக் கூடியதாகவும் இருக்கும்.

மேலும், பெற்றோர் தமக்குத் தேவையான தரத்திலும், வடிவத்திலும் தமது விருப்பத்திற்கேற்ப, தமக்குச் சாதகமான பெறுமதியின் அடிப்படையில், ஆடைகளைப் பெற முடியும். குறிப்பிட்ட ஒரு முகவரிடம் செல்ல வேண்டிய அவசியமும் ஏற்படமாட்டாது. TCDSB சாாந்த சகல ஊழியர் மூலமும், பெற்றோர் மூலமும், பல தகவல் மையங்களில் இருந்தும், பெறுப்பட்ட விபரங்களின் அடிப்படையிலும், இப் பொது உடைத் தொகுதி அறிமுகம் செய்வதன் மூலம், பல குடும்பங்களில் பண சேமிப்பினை ஏற்படுத்த முடியும் என்பதும், உறுதிப்படுத்தப்படுகின்றது.

அதுமட்டுமன்றி, இதன் மூலம், சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளும் தவிர்க்கப்படும். அத்துடன், பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்குப் பல்வேறுபட்ட ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அவையாவன:

- ❖ கவனமாகவும், சுத்தமாகவும் பாவிக்கப்பட்ட இவ்வாறான ஆடைகளை பழைய மாணவர்களிடமிருந்தும் ஏனைய பாடசாலைகளிலிருந்தும் பெற்றுக் கொடுத்தல்.
- ❖ தவிர்க்க முடியாத கால கட்டங்களில் வகுப்பாசிரியர்களின் உதவியுடன், பாடசாலையின் அவசர நிதி ஒதுக்கீடு மூலம் பண உதவியினைப் பெற்றுக் கொடுத்தல்.
- ❖ விற்பனையாளர்களுடனும், முகவர்களிடமும் குறைந்த விலைக்கு உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

**13. இப் பொது உடைத் தொகுதி முறையை, உங்கள் பாடசாலைச் சமூகத்திற்கு அறிமுகம் செய்வதில், சார்பாக அமையும் காரணிகள் எவை?**

- ✓ இப் பொது உடைத் தொகுதி சம்பந்தமான சகல ஆய்வுகளையும், அதன் அமுலாக்கத்தையும், TCDSB இனுடைய பொது உடைத் தொகுதிக்கான மத்திய செயற்குழு பொறுப்பேற்கின்றது.
- ✓ 2009 பெப்பிரவரி மாதம் 25ம் திகதி வெளியிடப்பட்டுள்ள TCDSB மேற்பார்வைக் குழுவினுடைய அறிக்கையில், பல்வேறுபட்ட ஆய்வுகளிலிருந்து திரட்டப்பட்ட தகவல்களின் சாராம்சம் தரப்பட்டுள்ளது. இவை யாவும், இந்நடை முறைக்கு ஆதரவு வழங்குவதாகவே கருதப்படுகின்றது. மேற்பார்வைக் குழுவினுடைய அறிக்கையின் பின்னினைப்பில், மேற்குறிப்பிட்ட தகவல்களின் சகல விபரங்களும் வெளியிடப்பட்டுள்ளன. அத்துடன், அனைத்து மாநகரப் பாடசாலை நிர்வாக சபைகளின் உடைத் தொகுதிக் கொள்கைகளும், TCDSB இனது சீருடை முறை, மற்றும் பொது

உடைத் தொகுதி முறை அமுல்படுத்தப்பட்டுள்ள பாடசாலைகளின் பட்டியலும் அடங்கியுள்ளது. அதுமட்டுமன்றி, அவ்வகையான பாடசாலைகளின் அனுபவங்களும் பகிரப்பட்டுள்ளன.

- ✓ வினா விடைகளடங்கிய ஒரு ஆவணமும், பாடசாலை அதிபர் /உப அதிபர் மற்றும் CSAC/CPIC உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- ✓ இப் பொது உடைத் தொகுதி சம்பந்தமாக, பெற்றோரால் எழுப்பப்படக் கூடிய வினாக்களும், அதற்கான விடைகளும் அடங்கிய துண்டுப் பிரசுரம் ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.
- ✓ பெற்றோர் / பாதுகாவலருக்கு அதிபரால் வழங்கப்படக் கூடிய மாதிரிக் கடிதமும், பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- ✓ நிர்வாக சபையின் இணையத் தளத்தில், இப் பொது உடைத் தொகுதியின் அறிமுகம் சம்பந்தமான சகல விபரங்களும் அடங்கிய ஒரு இணையப் பக்கம் (Web Page) உருவாக்கப்பட்டுள்ளது.
- ✓ முக்கியமான நேர்காணல்களும் கலந்துரையாடல்களும் மொழி பெயர்க்கப்படும்.
- ✓ கடந்த காலங்கலில், நிர்வாக சபையின் 49 பாடசாலைகளில் சீருடை முறை, மற்றும் பொது உடைத் தொகுதி முறை, அமுலில் இருந்து வருகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டு, ஏனைய பாடசாலைகள், இவ்வாறான பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோரை அழைத்து, தமது பாடசாலைகளின் கலந்துரையாடல்களில் பங்கேற்க வைத்து, அவர்களது அநுபவங்களைப் பகிரச் செய்ய முடியும்.

**14. நிர்வாக சபையின், பாடசாலைச் சமூகங்களின் கருத்துக்கள் எவ்வாறு பிரதிநிதித்துவப் படுத்தப்படுகின்றன?**

இப் பொது உடைத் தொகுதியின் மத்திய செயற்குழுவே, சகல உறுப்பினரது கருத்துக்களுக்கும் பிரதிநிதியாகும். இம் மத்திய செயற்குழுவானது, நிர்வாக சபையின் உறுப்பினர்களையும், ஆசிரியர்களையும், பெற்றோரையும் கொண்டிருக்கும். அத்துடன், சீருடை முறை அமுலில் உள்ள, அமுலில் இல்லாத பாடசாலை ஆசிரியர்களையும், இடைநிலை தர்மகர்த்தாக்களையும் கொண்டிருக்கும். பெற்றோரின் கருத்துக்கள், இச்செயற்திட்டத்தில் முக்கியம் பெறுவதால் அவர்களின் பிரதிநிதித்துவம் அத்தியாவசியமாகக் கருதப்படுகின்றது.

**15. பெற்றோர்/பாதுகாவலருக்கு, இப் பொது உடைத் தொகுதியின் அறிமுகம் சம்பந்தமாக எழும் சந்தேகங்களைத் தீர்ப்பதற்கும், தமது கருத்துக்களைப் பகிரவும், யாருடன் தொடர்பு கொள்ள வேண்டும்?**

பாடசாலை அதிபர் /உப அதிபர் ஆகியோரை அணுக வேண்டும் அன்றேல், CSAC தலைவருடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

*****************************************************************************